பெறுகிறோம். இதன் மூலம் நாம் அவரோடும், ஒருவர் ஒருவரோடும் ஒன்றிக்கிறோம். "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்" (1 கொரி 10:17). இவ்வாறு நாம் எல்லாரும் அந்த உடலின் உறுப்புகள் ஆக்கப்பெறுகிறோம் (1 கொரி 12:27). நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கின்றோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம் (உரோ 12:5).

மனித உடலின் உறுப்புக்கள் பலவாயினும் அவை அனைத்தும் ஒரே உடலாய் உள்ளன. இதுபோலவே நம்பிக்கை கொண்டோரும் கிறிஸ்துவில் ஒரே உடலாய் உள்ளனர் (1 கொரி 12:12). கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்புவதிலும் உறுப்புகளுக்குள்ளும் பல்வேறு பணிகளுக்குள்ளும் வேறுபாடு உண்டு. ஆவியார் ஒருவர் அவர் தம்முடைய வளமைக்கும், பணிகளின் தேவைக்கும் ஏற்பத் திருஅவையின் நலனுக்காக வெவ்வேறான தம் அருள் கொடைகளை வாரி வழங்குகிறார் (1 கொரி 12:1-11). இந்த கொடைகளுள் திருத்தூதருக்கு அளிக்கப்பட்ட அருள் முதலிடம் வகிக்கிறது. அருள் கொடைகளால் நிரப்பப் பெற்றவர்களைக்கூட அதே ஆவியார் திருத்தூதர்களின் அதிகாரத்திற்கு உட்படுத்தினார் (1 கொரி 14). அதே ஆவியார் தம்மாலும் தம் ஆற்றலாலும் உறுப்புகளினிடையே உள்ள இணைப்பாலும் உடலை ஒன்றுபடுத்துகிறார்; நம்பிக்கை கொண்டோரிடையே அன்பை விளைவித்து அதைத் தூண்டுகிறார். எனவே, ஓh உறுப்பு துன்புற்றால் அதனுடன் எல்லா உறுப்புகளும் சேர்ந்து துண்புறும்; ஓர் உறுப்பு பெருமைபெற்றால் அதனுடன் மற்ற உறுப்புகளும் சேர்ந்து மகிழ்வுறும் (1 கொரி 12:26).

கிறிஸ்துவே இவ்வுடலின் தலை. அவரே கட்புலனாகக் கடவுளது சாயல்; அனைத்தும் அவர் வழியாய்ப் படைக்கப்பட்டன. அனைவருக்கும் முந்தியவர் அவரே. அனைத்தும் அவரோடு இணைந்துள்ளன. திருஅவையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் அவரே எல்லாவற்றுள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர்த் தலைப்பேறு ஆனார் (கொலோ 1:15-18): வலிமைமிக்க ஆற்றலால் விண்ணிலும் மண்ணிலும் உள்ளவை அனைத்தையும் அவர் ஆளுகிறார்; நிகரற்ற தம் நிறைவாலும் செயலாலும் இந்த முழு உடலையும் தம் மாட்சிப் பெருக்கால் நிரப்புகிறார் (எபே 1:18-23).7

கிறிஸ்து எல்லா உறுப்புகளிலும் உருவாகும்வரை அவை (கலா 4:19), அவரை ஒத்திருக்க வேண்டும். இதற்காக அவருடன் ஆட்சி செய்யும்வரை அவரது சாயலாக உருமாற்றம் அடைந்து அவரோடு இறந்து, உயிர்த்தெழுந்து நாம் அவரது வாழ்வின் மறை நிகழ்ச்சிகளில் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறோம் (பிலி 3:21; 2 திமோ 2:11; எபே 2:6; கொலோ 2:12 முதலியன). நாம் அவருடைய துன்பங்களில் பங்கு பெற்று அவரோடு மகிமையிலும் பங்கு பெறுவதற்காக (உரோ 8:17) இன்னும் உலகில் பயணம் செய்து, துன்ப துயரங்களில் அவரது அடிச் சுவட்டிலே நடந்து, தலையோடு உடல் ஒன்றித்திருப்பது போல அவருடைய துன்பங்களிலும் அவரோடு ஒன்றித்திருக்கிறோம்.

"அவரால்தான் முழு உடலும் தசைநார்களாலும் மூட்டுகளாலும் இறுக்கிப் பிணைக்கப்பட்டு ஊட்டம் பெற்றுக் கடவுளின் விருப்பத்திற்கேற்ப வளருகிறது" (கொலோ 2:19). அவரே தம் உடலாகிய திருஅவையின் பணிகளுக்குத் தேவையான கொடைகளைப் பகிர்ந்தளிக்கிறார். இவை வழியாக நாம் அன்பின் அடிப்படையில் உண்மையின்படி செயல்பட்டுத் தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் வளர (எபே 4:11-16 கிரேக்க மூலம்), அவருடைய ஆற்றலால், நிறைவாழ்வடைய ஒருவர்க்கொருவர் உதவுகிறோம்.

இடைவிடாது அவரில் நாம் புதுப்பிக்கப்படுமாறு (எபே 4:23) அவர் நமக்குத் தம் ஆவியாரை வழங்கு இருக்றநார்; இதெ ஆவியாரே தலையிலும் உறுப்புகளிலும்இருந்துகொண்டு முழு உடலுக்கும் உயிரூட்டுகிறார்; அதை ஒன்றாய் இணைக்கிறார்; அதை இயக்குகிறார். எனவேதான் திருஅவைத் தந்தையர்களால் உயிரின் மூலமான ஆன்மா மனித உடலிலே ஆற்றும் அலுவலுடன் இவரது அலுவரை ஒப்பிட முடிந்தது.

மனைவியைத் தம் சொந்த உடல் எனக் கருதி அன்பு செய்யும் கணவனைப்போல, கிறிஸ்து திருஅவையைத் தம் மணமகளாக அன்புசெய்கிறார். (எபே 5:25-28). திருஅவையும் தன் தலைவருக்குப் பணிந்து இருக்கிறது. (எபே 5:23-24). "இறைத் தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது" (கொலோ 2:9) தம் உடலலாகவும் முழுமையாகவுமிருக்கும் திருஅவை வளர்ந்து, கடவுளின் முழு நிறைவையும் பெறும் வண்ணம் (எபே 3:19) அதைத் தம் தெய்வீகக் கொடைகளால் அவர் நிரப்புகிறார் (எபே 1:22-23).

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
இந்த கோட்பாடு தொடர்பான உங்கள் மதிப்பீடுகளை– மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மைய (API) மின்னஞ்சலுக்கு directorapikl@gmail.com அனுப்பவும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2023

28 & 29 அக்டோபர் 2023


# Newbec

NEW WAY OF BEING CHURCH

## ஆண்டின் பொதுக்காலம் 30 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)




திருஅவை கிறிஸ்துவின் மறையுடல்

7. இறைமகன், தம்மோடு இணைக்கப்பட்ட மனித இயல்பில் இறந்து, உயிர்த்தெழுந்து, சாவை வென்று மனிதரை மீட்டார்; அவர்களைப் புதிய படைப்பாக உருமாற்றினார் (கலா 6:15; 2 கொரி 5:17). எல்லா மக்களிடமிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட்ட தம் சகோதரர், சகோதரிகளுக்கு ஆவியாரை வழங்கி அறிவுக்கு எட்டா முறையிலே அவர்களைத் தம் உடலாக அமைத்தார்.

துன்பங்களுக்கு ஆளாகி மாட்சிபெற்ற கிறிஸ்துவுடன் ஒன்றித்திருக்கும் நம்பிக்கை கொண்டோர் எல்லாருக்கும் அருளடையாளங்கள் வாயிலாக இவ்வுடலில் மறைந்த ஆனால் உண்மையான முறையில் கிறிஸ்துவின் வாழ்வு வழங்கப் பெறுகிறது; திருமுழுக்கால் நாம் கிறிஸ்துவைப் போலாகிறோம். "நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1 கொரி 12:13). இத்திருச்சடங்கு கிறிஸ்துவின் இறப்போடும் உயிர்த்தெழுதலோடுமுள்ள ஒன்றிப்பைக் குறித்துக் காட்டி விளைவிக்கிறது.". அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்" (உரோ 6:4-5). நற்கருணை அப்பத்தைப் பிட்டு உண்பதன் மூலம் ஆண்டவரின் உடலில் உண்மையாகவே பங்கு